


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.12.2024) சென்னை, சேப்பாக்கம், எழிலகத்தில் அமைந்துள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, "ஃபெஞ்சல்' புயல் காரணமாக விழுப்புரம், கடலூர் ஆகிய மாவட்டங்களில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரண நடவடிக்கைகள் குறித்து காணொலிக் காட்சி வாயிலாக அமைச்சர்பெருமக்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், சிறப்பு பணி அலுவலர்கள் ஆகியோருடன் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வருவாய் நிருவாக ஆணையர் ராஜேஷ் லக்கானி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலர் திருமதி பெ. அமுதா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.12.2024) 'ஃபெஞ்சல்' புயலால், தொடர்ந்து மழை பெய்துவருவதையொட்டி, கொளத்தூர், சீனிவாசன் நகரில் உள்ள நகர ஆரம்ப சுகாதார நிலையத்தினை ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, ஆர்.கிரிராஜன், ப. ரங்கநாதன் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் உடனிருந்தனர்.

## மழை நிவாரணப் பணிகளுக்கு பொது மக்கள் வெகுவாகப் பாராட்டு!

# எதையும் எதிர்கொண்டு சமாளிக்கும் வகையில் தயாராக உள்ளோம்!

## மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் ஆய்வு செய்தபின் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி !

**சென்னை, டிச. 2 -**

**மழை நிவாரணப் பணிகளுக்கு பொது மக்கள் வெகுவாகப் பாராட்டு தெரிவித்துள்ளனர் என்றும், கடும் மழை காரணமாக சென்னையில் இரண்டு நாட்களில் 9,10,000 பேருக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும், எவ்வளவு கனமழை பெய்தாலும் எதையும் எதிர்கொண்டு சமாளிக்கும் வகையில் தயாராக உள்ளோம் எனவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் ஆய்வு செய்தபின் பேட்டி அளிக்கையில் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்அவர்கள் மாநில அவசர கால செயல்பாட்டு மையத்தில் நேற்று (01.12.2024) நேரில் ஆய்வு மேற்கொண்ட பிறகு பத்திரிகையாளர்களுக்கு அளித்தபேட்டி வருமாறு:-

வங்கக் கடலில் உருவாகியிருந்த ஃபெஞ்சல் புயல் காரணமாக நேற்று சென்னையில் கனமழை பெய்தது.

கனமழை பெய்தாலும் நம்முடைய தமிழ்நாடு அரசு மேற்கொண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் காரணமாகவும், தூர்வாரும் பணிகளின் காரணமாகவும், பெரும்பாலான பகுதிகளில் மழைநீர் தேங்கவில்லை என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும்.

உங்களில் பல தொலைகாட்சிகளிலும் இதைப் பற்றி பாராட்டி சொல்லியிருக்கின்றீர்கள். வடசென்னை பகுதிகளில் மழைநீரை அகற்றுவதற்கு இராட்சத மின் மோட்டார்கள் பயன்படுத்தப்பட்டு மழைநீர் அகற்றப்பட்டிருக்கிறது. தொடர்ந்து சில இடங்களில் அந்தப் பணிகள் நடைபெற்று வருகிறது.

### உடனுக்குடன் தேங்கிய தண்ணீர் வெளியேற்றம்!

மழைநீர் தேங்கும் இடங்களில் அதனை வெளியேற்றும் வகையில் பல்வேறு திறன் கொண்ட 1,686 மோட்டார் பம்புகள் எப்போதும் தயார் நிலையில் உள்ளன. தேங்கிய இடங்களில் உடனுக்குடன் தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

சென்னையில் உள்ள 22 சுரங்கப் பாதைகளில் 21 சுரங்கப்பாதைகளில் போக்குவரத்து சீராக உள்ளது. கணேசபுரம் சுரங்கப் பாதை ரயில்வே மேம்பாலப் பணி காரணமாக போக்குவரத்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

சென்னையில் 32 நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டு, அதில்1,018 நபர்கள் தங்க வைக்கப்பட்டு, அவர்களுக்கு தேவையான உணவு, குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு இன்று வரை 9 இலட்சத்து 10 ஆயிரம் உணவு பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 386 அம்மா உணவகங்கள் 1,07,047 பேருக்கு இலவச உணவு!

நேற்றைய தினம் அம்மா உணவகங்களில் இலவசமாக உணவு வழங்க வேண்டும் என்று நான் அறிவித்திருந்தேன். அந்த அடிப்படையில், 386 அம்மா உணவகங்களில் 1,07,047 பேருக்கு உணவுஇலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

வடகிழக்குப் பருவ மழையினை முன்னிட்டு பெருநகர சென்னை மாநகராட்சியில் அலுவலர்கள், பொறியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள் என மொத்தம் 22 ஆயிரம் பேர் மழைக்கால மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் பணிகளை 2,149 களப்பணியாளர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

எதையும் எதிர்கொண்டு சமாளிக்கும் வகையில் சென்னை தயார் நிலையில் உள்ளது.அதைத்தொடர்ந்து, இன்று காலை கொளத்தூர் தொகுதிக்கு நான் சென்றிருந்தேன். கடந்த காலங்களில் தண்ணீர் நிற்கும் பகுதிகளில் எங்கும் தண்ணீர் தேங்கவில்லை. இதை மக்கள் மகிழ்ச்சியாக தெரிவித்தார்கள். ஒரு சில ஊடகங்கள் தவிர்த்து பல்வேறு ஊடகங்களில் சென்னை மக்கள்அதை பாராட்டியிருக்கிறார்கள். அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### அமைச்சர்கள் - அதிகாரிகளிடம் நிலைமையை கேட்டு வருகிறேன்!

மாநிலத்தின் மற்ற மாவட்டங்களின் நிலையை நேற்று முதல் இன்று வரை தலைமைச் செயலாளர் மூலமும் அந்தந்த மாவட்ட அமைச்சர்கள், மாவட்ட ஆட்சியர்களிடம் தொலைபேசி மூலமும் கேட்டு அறிந்து வருகிறேன்.

அந்த வகையில், விழுப்புரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், வரலாறு காணாத மழை பதிவாகி உள்ளது. நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது.

> **“இன்று காலை கொளத்தூர் தொகுதிக்கு நான் சென்றிருந்தேன். கடந்த காலங்களில் தண்ணீர் நிற்கும் பகுதிகளில் எங்கும் தண்ணீர் தேங்கவில்லை. இதை மக்கள் மகிழ்ச்சியாக தெரிவித்தார்கள். ஒரு சில ஊடகங்கள் தவிர்த்து பல்வேறு ஊடகங்களில் சென்னை மக்கள்அதை பாராட்டியிருக்கிறார்கள். அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.”**

குறிப்பாக, கடந்த 24 மணி நேரத்தில் விழுப்புரம் மாவட்டத்தில் மயிலத்தில்49 செ.மீ., மழையும், நெம்மேலியில் 46 செ.மீ., மழையும், வானூரில் 41 செ.மீட்டர் என பல பகுதிகளில் அதிகனமழை பதிவாகி உள்ளது.

விழுப்புரம் மாவட்டத்தில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை துரிதப்படுத்த மாவட்ட அமைச்சரான க.பொன்முடி அவர்களுடன் இணைந்து செயல்படுவதற்கு போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்களையும், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அவர்களை அனுப்பி வைத்துள்ளேன். அதேபோல், அமைச்சர்கள் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் மற்றும் சி.வி.கணேசன் அவர்களும், கடலூர் மாவட்டத்தில் மீட்பு மற்றும் நிவாரண பணிகளை துரிதப்படுத்தி வருகிறார்கள்.

### நிவாரணப் பணிகளை துரிதப்படுத்த நடவடிக்கை!

விழுப்புரம் மாவட்டத்தில், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து ஆலோசனை வழங்கி, பணிகளை துரிதப்படுத்த நீர்வள ஆதாரத் துறை கூடுதல் செயலாளர் மணிவாசன் தலைமையில், இந்திய ஆட்சிப்பணி அலுவலர்கள் திரு.ஆல்பி ஜான், திரு.கிரன் குராலா, திரு.பொன்னையா, திரு.சிவராசு ஆகியோரை அனுப்பி வைத்துள்ளேன்.

ஏற்கனவே மாவட்ட கண்காணிப்பு அலுவலர் S.J. சுன்சோங்கம் ஜடக்சிரு அவர்கள் மூன்று நாட்களாக விழுப்புரத்தில் முகாமிட்டு கண்காணித்து வருகிறார்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு!

கடலூர் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப்சிங் பேடி, தலைமையில் எஸ்.எ.ராமன், அவர்களையும் அனுப்பி வைத்துள்ளேன்.

மேலும், விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை பார்வையிட்டு நிவாரணப் பணிகளை துரிதப்படுத்த துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களையும் நான் அனுப்பி வைத்துள்ளேன்.விழுப்புரம் மாவட்டத்தில் மீட்பு பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு பேரிடர் மீட்பு படை மற்றும் தேசிய பேரிடர் மீட்பு படையைச் சார்ந்த 12 குழுக்கள் விரைந்துள்ளன.

விழுப்புரம் மாவட்டத்தில் துப்புரவு பணிகளை மேற்கொள்ள பிற மாவட்டங்களிலிருந்து துய்மைப் பணியாளர்கள் வரவழைக்கப்பட்டு, அவர்களம் அதில் ஈடுபட உள்ளார்கள். இன்று காலை நிலவரப்படி விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் 26 முகாம்களில் 1,373 நபர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்கள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதோடு, மீட்பு மற்றும் நிவாரண பணிகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது.

### ஒன்றியக் குழுவை அனுப்ப கேட்டுக்கொள்வோம்!

இந்த புயலின் காரணமாக தமிழ்நாட்டில் குறிப்பாக, கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு ஆகியமாவட்டங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளை சீரமைக்கவும், பாதிப்புக்குள்ளான மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் தேவையான நிதி வழங்கிடவும், பாதிப்புகளை பார்வையிட மத்திய குழுவை அனுப்பி வைக்க ஒன்றிய அரசை கேட்டுக்கொள்ள இருக்கிறோம்.

இன்று திருவண்ணாமலை மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களிலும் மழை அதிக அளவு இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, மாவட்ட அலுவலர்களையும் தயார் நிலையில் இருக்க அறிவுறுத்தியுள்ளோம் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

### மக்களுக்கு உரிய முறையில் நிவாரணம் வழங்க நடவடிக்கை!

**செய்தியாளர்:** உண்மையாகவே நேற்றிலிருந்து எந்த மின் தடையும் இல்லை. மாநகராட்சி முதல் கொண்டு அனைத்து துறைகளும் நன்கு வேலை பார்த்துள்ளார்கள். அவர்களுக்கு எங்களது பாராட்டுகள்.

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்:** நன்றி

**செய்தியாளர்:** ஒன்றிய அரசிடமிருந்து கூடுதலாக தமிழ்நாடு அரசு என்ன எதிர்பார்க்கிறது. தேசிய பேரிடர் மீட்புக்குழு வரவேண்டும் என்று எதிர்பார்க்கிறோமோ?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** மழை இன்னும் பல மாவட்டங்களில் தொடர்ந்து பெய்து கொண்டு வருகிறது. முழுமையாக நிற்கவில்லை. ஓரளவு மழை குறைந்த பின்பு தான் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும். அதேபோல், பயிர் சேதத்தைப் பொறுத்தவரையில் மழை நீர் வடிந்தவுடன் முறையாக கணக்கெடுப்பு செய்து, இழப்பீடு தொகை எப்படி வழங்க வேண்டும் என்பதை பிறகுதான் முடிவு செய்யமுடியும். நாளையதினம் தலைமைச் செயலகத்தில், சம்மந்தப்பட்ட அலுவலர்களுடன் கூட்டம் நடத்த இருக்கிறோம். அதில்கலந்தாலோசித்து முடிவு எடுத்து, அதற்குப் பிறகு ஒன்றிய அரசிக்கு இதுகுறித்து விளக்கமாக கடிதம் மூலம் தெரிவிப்போம்.

**செய்தியாளர்:**காணொலி காட்சி வாயிலாக அலுவலர்களுடன் கலந்தாலோசித்தீர்கள். நீங்கள் நேரடியாக செல்ல வாய்ப்பு இருக்கிறதா?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** துணை முதலமைச்சர், அமைச்சர் பெருமக்கள், மூத்த அரசு உயர் அலுவலர்களை அனுப்பி வைத்துள்ளோம். ஏற்கனவே, அந்த மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியராக பணிபுரிந்த அலுவலர்களையும் அனுப்பி வைத்துள்ளோம். தேவைப்பட்டால் நானும் நேரில் செல்வேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கோ.சி. மணி

### டிசம்பர் 2 (2016)



தலைவர் கலைஞர் அவர்களால் 'தம்பி மணி' என பாசம் பொங்க அழைக்கப்பட்ட கழகத்தின் தளகர்த்தர்களில் முதன்மையானவராகத் திகழ்ந்த இவர், மிட்டா, மிராசுகள் நிறைந்த தஞ்சை மாவட்டத்தில் ஒரு சாதாரண, தொண்டனாக திராவிட இயக்கக் கொள்கைகளையே தமது மூலதனமாகக் கொண்டு அதனை நெஞ்சில் ஏந்தி வலம் வந்தவர். சிறு வயது முதலே தன்னை இயக்கத்தில் ஒப்படைத்துக் கொண்டு ஓயாது பணியாற்றிய உயரிய பண்புக்கும் – எளிமைக்கும் சொந்தக்காரர்.

தந்தை பெரியார் அவர்களின் மேடைப் பேச்சால் ஈர்க்கப்பட்டு, திராவிடர் கழகத்தில் இணைத்துக் கொண்ட இவர், கழகம் தொடங்கிய 1949–ஆம் ஆண்டிலேயே மேக்கிரி மங்கலம் கிராமக் கிளையின் பொருளாளராகவும் – மயிலாடுதுறை வட்டக்கிளைச் செயலாளராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் – மாவட்டக் கழகச் செயலாளராகவும் – மண்டலப் பொறுப்பாளராகவும் – உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினராகவும் செயல்பட்டு, ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் கழகத்தை வளர்க்க ஓய்வறியாது பாடுபட்டவர்! தலைவர் கலைஞர் அவர்களின் சொல்லே அவருக்கு வேத வாக்கு எனச் செயல்பட்டவர்.

தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்காக மட்டுமின்றி, தமிழக விவசாயிகளுக்காகவும் போராட்டங்கள் பல நடத்தியதோடு மட்டுமல்லாமல், இவர் கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர். குறிப்பாக நெருக்கடி காலத்தில் மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறையில் இருந்தவர்.

இவர் குடந்தை மத்திய கூட்டுறவு வங்கியின் தலைவராகவும் சந்திரசேகர்புரம் கூட்டுறவு மொத்தவிற்பனைப் பண்டக சாலையின் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

இவர் 1962, 1989, 1996, 2001, 2006 என ஐந்து முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 1968–ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து இரண்டு முறை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் பணியாற்றினார். 1989, 2006 ஆகிய இரு முறை வேளாண்மைத் துறை அமைச்சராகவும் – 1996ல் உள்ளாட்சித் துறை அமைச்சராகவும் தலைவர் கலைஞர் தலைமையிலான அமைச்சரவையில் திறம்படப் பணியாற்றியவர்.

2001ல் நடைபெற்ற முப்பெரும் விழாவில் இவருக்குப் பெரியார் விருதினை, தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார்.

"என்னரும் தளகர்த்தர் கோ.சி.மணி, எங்கோ போய்விட்டாரே!" என தலைவர் கலைஞர் இரங்கல் தெரிவித்துள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**